# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## <u>ஆணை நாள் 09.06.2026</u>

## <u>முன்னிலை</u>

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**<u>வழக்கு எண்.CP-2749-G-2024</u>**

திரு. முனைவர் தி. சுரேஷ் - மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர், - பொது அதிகார அமைப்பு
மண்டலக் கலை பண்பாட்டு மையம்,
பாரதி உலா முதல் தெரு,
தல்லாக்குளம், மதுரை - 625002

## <u>ஆணை</u>

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 18.02.2024 நாளிட்ட மனுவில், மதுரை மண்டல கலை பண்பாட்டு மையத்தில் கணினியிலிருந்து 24.09.2021 முதல் 10.10.2021 வரை உள்ள கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட மற்றும் சேவ் செய்யப்பட்ட குறிப்பாணையை பார்வையிட அனுமதி வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

2. மனுதாரர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனக் கோரி 04.06.2024 நாளிட்ட பிரிவு 18(1)-ன்கீழ் புகார் மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். இப்புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (09.06.2026) காணொளி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

3. இவ்வாணையத்தில் இன்று நடைபெற்ற காணொளி விசாரணையில் மனுதாரர் முனைவர் தி. சுரேஷ் அவர்கள் காணொலி விசாரணையில் ஆஜரானார். திரு.நா.ரேவதி, பொதுத் தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர், மண்டலக் கலை பண்பாட்டு மையம், மதுரை மாவட்டம் அவர்கள் பொது அதிகார அமைப்பின் சார்பாக நேரில் ஆஜரானார்.

4. இன்றைய காணொளி விசாரணையில் ஆஜரான மனுதாரர் தனக்கு எதிரான 17(b) குற்றச்சாட்டு ஆணை முந்தைய தேதியிட்டுப் பிறப்பிக்கப்பட்டதாகவும், அதனை உறுதி செய்வதற்காக தகவல் கோரியதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ஏற்கனவே ந.க.எண்.79/அ1/2024, 22.03.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை இவ்வாணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரர் கோரிய தரவுகள் 2021 ஆண்டு தொடர்புடையதாகவும், தங்களது அலுவலக பராமரிப்பில் இல்லை என்றும் பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனு மற்றும் பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்து ஆணையம் பொதுத் தகவல் அலுவலருக்கு கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கிறது:-

***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 18.02.2024 நாளிட்ட மனுவில் கோரிய மதுரை மண்டல கலை பண்பாட்டு மையத்தில் கணினியிலிருந்து 24.09.2021 முதல் 10.10.2021 வரை உள்ள கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட மற்றும் சேவ் செய்யப்பட்ட குறிப்பாணை கணினியில் இல்லையெனும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் இன்றைய விசாரணையில் தெரிவித்தவாறு மனுதாரர் கோரும் தரவுகள் 2021 ஆண்டு தொடர்புடையதாகவும், தங்களது அலுவலக பராமரிப்பில் இல்லை என்ற தகவலை மனுதாரருக்கு சான்றொப்பமிட்டு சட்டப்பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி பதில் வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விவரத்தை அறிக்கையாக விரைவஞ்சலில் இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒருவாரக் காலத்திற்குள் சமர்ப்பிக்குமாறும், தவறும்பட்சத்தில் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 20(1), 20(2) மற்றும் 19(8)(b)-ன்கீழான நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என்றும் பொதுத்தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இவ்வழக்கு இத்துடன் முற்றாக்கப்படுகின்றது.***

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண் CP-2749-G-2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி இயக்குநர்,
மண்டலக் கலை பண்பாட்டு மையம்,
பாரதி உலா முதல் தெரு,
தல்லாக்குளம், மதுரை - 625002

**மனுதாரர்**

திரு. முனைவர் தி. சுரேஷ்
219, மேல மாசி வீதி,
மதுரை - 625001
Phone : 9443930540